பிரிவுகள் 2 முதல் 14 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1989) நிறைவேற்றப்பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(எ) மாநகராட்சிச் சட்டங்கள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சி சட்டங்கள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/1989) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்''.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதன் மீது விவாதத்தைத் தொடங்குபவர் திரு உ. ரா. வரதராசன் அவர்கள்.

திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்ட முன்வடிவை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய சார்பிலே வரவேற்று சில கருத்துக்களை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

நம்முடைய மாநகராட்சிகள், அவற்றிலே வாழ்கின்ற மக்களுடைய நிலைமை எல்லாம் எப்படி இருக்கின்றன, அவை மாநகராட்சியினுடைய தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள்

* 3—5—1989 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

மூலமாக செம்மையுற நடத்தப்படவேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்டவர்களிலே ஆதி திராவிடர்கள், பெண்கள் ஆகியோருக்கு இடம் இருக்க வேண்டுமென்ற கருத்துக்கள் சாலச் சிறந்தவை. அவற்றிற்கு இந்தச் சட்ட முன்வடிவு வடிவம் கொடுக்கிறது என்ற முறையிலே இதை வரவேற்கிறேன்.

சென்னை மாநகராட்சியை எடுத்துக்கொண்டால், இது நூறு வட்டங்களைக் கொண்ட மாநகராட்சியாக இருந்து, 150 வட்டங்களாக உருவாக்கப்பட்டது. புதிதாக சேர்க்கப்பட்ட பகுதிகளிலே இருப்பவர்கள் எல்லாம், உள்ளாட்சி அமைப்புகளின் கீழே தனியாக இருந்தாலே ஒரு சமூகக் கூடமாவது கிடைத்திருக்கும். இப்போது அதுகூட இல்லை. மாநகராட்சியிலே இணைக்கப்பட்ட காரணத்தினாலே, அவர்களுடைய அடிப்படை வசதிகள் எதுவும் கவனிக்கப்படுவதில்லை என்ற குறையோடு இருக்கின்றார்கள். சென்னை மாநகராட்சி முழுவதிலேயும் பல தெருக்கள், தனியார் தெருக்கள் என்று அழைக்கப்பட்டு அங்கு எந்தவிதமான அடிப்படை வசதிகள், கழிவுநீர் சாக்கடை வசதி, தெருவிளக்கு போன்றவைகூட அனுமதிக்கப்படாமல் இருந்துகொண்டு இருக்கின்றன. அவையெல்லாம் மாநகராட்சியாலே ஏற்கப்பட்டு அந்தந்தத் தெருவிலே குடியிருக்கக்கூடிய அடித்தலத்து மக்களுக்கும் அடிப்படை வசதிகளைச் செய்து தரவேண்டுமென்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே கழிவுநீர் அகற்றுவதற்கு இருக்கக்கூடிய ஏற்பாடு என்பது மிக மிக சொற்பமாகவே இருந்துகொண்டிருக்கின்றது. கழிவு நீர் கால்வாயினுடைய பராமரிப்பு சரியாக இருப்பதில்லை. இங்கே இருக்கக்கூடிய ஓடைகள் அல்லது கூவம், பக்கிங்காம் கால்வாய், அடையாறு போன்றவற்றிலே பார்த்தீனியம் செடிகள் வளர்ந்து அங்கே, புல், கொசுப் பண்ணைகளாகவே மாற்றப்பட்டிருக்கின்றன. அதனால் சுகாதாரம் கெடுகிறது. அதேபோல் என்னுடைய தொகுதியிலே 76 ஆவது வட்டத்திலே நெசப்பாக்கத்திலே ஒரு புல் பண்ணை இருக்கிறது. அந்த புல் பண்ணை அந்த 76 ஆவது வட்டம் முழுவதற்கும் வியாதிகளைப் பரப்பக்கூடிய அளவுக்கு கொசுக்களை, உற்பத்தி செய்யக்கூடிய அளவுக்கு கொசுப்பண்ணையாகவே இருந்துகொண்டு இருக்கின்றது.

வில்லிவாக்கம் பகுதியிலே பாதாளச் சாக்கடைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டும் இன்னும் நிறைவேற்றப்படாமல் நீடிக்கிறது. அதை விரைந்து நிறைவேற்ற வேண்டும். அதற்காக அங்கு வீதிகள் தோண்டப்பட்ட நிலையிலே அந்தப் பகுதியிலே வழக்கமாக இருக்கின்ற போக்குவரத்து வசதிகூட பாதிக்கப்பட்டிருக்கிறது. அதை விரைந்து நிறைவேற்ற அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கோருகிறேன்.

1989 மே 11] [திரு. உ. ரா. வரதராசன்]

சென்னை மாநகராட்சியையொட்டி இருக்கக்கூடிய பாடி பகுதியிலே அமைந்திருக்கக்கூடிய டி. வி. கம்பெனிகள் போன்றவை வெளியிடுகின்ற கழிவுகள் எல்லாம் சாக்கடை வழியே, 33 ஆவது வட்டம், அகத்திய நகர் போன்ற பகுதிகளிலே, எல்லாம் வழிந்துகொண்டு வருகின்றன. அவை அந்தப் பகுதிகளில் இருக்கிற மக்களின் ஆரோக்கியத்தை பாதிக்கக்கூடியதாக இருக்கின்றன. இப்படிப்பட்ட கழிவு நீரை, திறந்தக் கால்வாய்கள் மூலமாக வெளியேற்றாமல், மூடிய கால்வாய்களை அமைக்க வேண்டியது மிக மிக அவசியம். அந்தந்த கம்பெனிகள் இவற்றை, மாசு கட்டுப்படுத்தக்கூடிய ஏற்பாட்டை செய்ய வேண்டுமென்பது மிக மிக அவசியம்.

(பிற்பகல் 4-50)

அடுத்து மாநகராட்சிப் பணிகளை நன்கு நிறைவேற்ற குடிநீர் வடிகால் வாரியம், மின் வாரியம், மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் ஆகியவற்றிற்கும் மாநகராட்சிக்கும் இதையே இணக்கமான செயல்பாடுகள் இருப்பதில்லை. குடிநீர் வடிகால் வாரியம் கழிவு நீரேற்று நிலையம் அமைக்க வேண்டுமென்று மாநகராட்சிக்கு எழுதுகிறார்கள். மாநகராட்சி அதற்கான இடத்தைக் கொடுத்தால்தான் அதைச் செய்ய முடியும். அதற்கு மாதக் கணக்கில், ஆண்டுக் கணக்கில் ஆகிறது. எனவே ஒரு இணக்கமான செயல்பாட்டை ஒருங்கிணைப்பை ஏற்படுத்தினால் தான் மாநகராட்சிப் பணிகள் சிறப்பாக நடக்க உதவியாக இருக்குமென்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து சென்னையில் அதிகமாக இருக்கக்கூடிய பகுதிகள் குடிசைப் பகுதிகள்தான். குடிசை மாற்று வாரியம் சிலப் பணிகளை செய்தாலும்கூட, அந்த குடிசை மாற்று வாரியம் ஏற்படுத்தும் பகுதிகளானாலும் இன்னும் குடிசைகளாகவே இருக்கும் பகுதிகளானாலும் அங்கே அடிப்படை சுகாதார வசதிகள் சொற்பமாக இருக்கின்றன. அவை கேட்பாரற்ற நிலையில் இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருத்தத்தின்மீது பேசுகிறார்களா அல்லது மாநகராட்சி பற்றிய வர்ணனையா ?

திரு. உ. ரா. வரதராசன் : தலைவர் அவர்களே, திருத்தத்தினை ஒட்டி மாநகராட்சி பற்றிய குறைகளைச் சொல்லுகிறேன். இப்படிப்பட்ட திருத்தங்களோடு வரும் இந்த சட்ட முன் வடிவு நிறைவேறி மாநகராட்சித் தேர்தல்கள் நடைபெற்றாலும்கூட, இப்படிப்பட்ட குறைபாடுகளைப் போக்கும் அளவுக்கு மாநகராட்சியில் உறுப்பினர்களாக பங்கேற்பவர்கள்

பணியாற்றும் அளவுக்கு செம்மையான ஏற்பாடுகளை அரசு செய்ய வேண்டுமென்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

திருமதி பி. லட்சுமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சிகளில் ஆதி திராவிடர்கள், பழங்குடியினர் மற்றும் பெண்களுக்குப் பிரதிநித்துவம் கொடுக்கும் இந்தச் சட்டமுன் வடிவின்மீது என்னுடைய கருத்துக்களை வழங்க அனுமதி அளித்ததற்காக பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு தமிழக முதல்வரவர்கள் பெண்களுக்கு 30 சதவிகிதம் இட ஒதுக்கீடு செய்திருந்தார்கள். மாநகராட்சி தேர்தலிலேயும் 30 சதவிகிதம் இட ஒதுக்கீட்டை பெண்களுக்காக ஒதுக்கி தேர்தல்களை நடத்துவார்களானால் கோ-ஆப்ட் செய்யப்படுகிற அந்த நிலைமை உண்டாகாது. எனவே பெண்களுக்கு முக்கியத்துவம் அளிக்கின்ற வகையில் 30 சதவிகிதம் ஒதுக்கும் வகையில் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ரிசர்வ் தொகுதிகளில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் வேட்பாளர்களாக நிற்க வேண்டுமென்ற நிர்ணயம் சட்டமன்றத் தேர்தலுக்கு இருப்பது போல், மாநகராட்சித் தேர்தல்களிலும் குறிப்பிட்ட ஒரு சில வார்டுகளை பெண்களுக்கு ரிசர்வ் செய்ய வேண்டுமென்று கூறி அதற்குச் சட்டத் திருத்தத்தைக் கொண்டுவர வேண்டுமென்று பெண்கள் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் உள்ளாட்சி மன்றத் தேர்தல்களில் நியமன உறுப்பினர்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நியமித்தார்கள். எனவே நியமன உறுப்பினர்கள் ரத்து செய்யப்பட வேண்டுமென்றும், நியமன உறுப்பினர்கள் இருக்கக்கூடாது என்றும், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மட்டும்தான் அந்த இடத்தில் அங்கம் வகிக்க வேண்டுமென்றும், ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் இப்போது மாநகராட்சி தேர்தல்களில் மட்டும் இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஊராட்சி மன்ற தேர்தல்களுக்கு வேண்டாமென்று ஒதுக்கி வைத்து விட்டு, மாநகராட்சி தேர்தல்களுக்கு மட்டும் இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்து கோவாப்ட் செய்ய வேண்டுமென்று நிர்ணயித்திருக்கிறார்கள்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் 30 சதவிகிதம் பெண்களுக்கு இட ஒதுக்கீடு செய்ததைப் போலவே மாநகராட்சி மன்றத் தேர்தல்களிலும் கொண்டு வந்து அதை நிறைவேற்றித் தர வேண்டும் என்றும் எங்களுடைய புரட்சித் தலைவர்

அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் பெண்களுக்கும் தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்கும் உள்ளாட்சித் தேர்தல்களில் முக்கியத்துவம் அளித்து அந்தத் தேர்தலை நடத்தினார் என்பதைத் தெரிவித்துக் கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சி மன்றம் குறித்த திருத்தச் சட்ட முன்வடிவின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. வரதராஜன் அவர்களும் திருமதி இலட்சுமி அவர்களும் இங்கே கருத்துக்களை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வரதராஜன் அவர்கள் பேசும்போது மாநகராட்சித் தேர்தல்கள் நடைபெறாத காரணத்தால் மாநகரத்தில் மக்களுக்கு ஏற்பட்டிருக்கிற சங்கடங்களை விளக்கிக் காட்டி அவையெல்லாம் போக்கப்படுவதற்கு சில நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று தெரிவித்தார்கள், அந்தக் கருத்தின் அடிப்படையில்தான் இந்த ஆட்சி, தேர்தல் நடைபெறுகிறவரை அதிகாரிகளைக் கொண்டு, நகரத்தில் வாழ்கிற மக்களைப் பாதுகாக்க வேண்டும்—அவர்கள் சுகாதாரத்தோடு இருக்க வேண்டும் என்று நடவடிக்கை எடுத்திருக்கிறது. தொடர்ந்து அந்த நடவடிக்கைகளில் அரசு ஈடுபடும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திருமதி லட்சுமி அவர்கள் இந்த ஆட்சியில் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சியில்—பெண்களுக்கு அரசாங்க வேலை வாய்ப்புகளில் 30 சதவீதம் ஒதுக்கீடு என்று அறிவித்திருப்பதைப் போல், மாநகராட்சிகளுக்கு நடைபெறுகிற தேர்தல்களிலும் 30 சதவீத இட ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்று பேசினார்கள். வேலை வாய்ப்பு வழங்குவது வேறு; தேர்தல்களில் அவர்களுக்கு என்று தனி ஒதுக்கீடு செய்து தருவது என்பது வேறு. ஆனால் ஏற்கெனவே இந்த அவையில் சட்ட முன்வடிவு வைக்கப்பட்ட பிறகு, அரசின் சார்பில்—அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில்—நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு நல்ல திட்டத்தை அறிவித்து அதை அரசாங்கத்தின் திருத்தமாக மாண்புமிகு உறுப்பினர்களுக்கெல்லாம் சுற்றுக்கு விடப்பட்டது.

1972 ஆம் ஆண்டுக்கு முன்பு சென்னையைப் பொறுத்தவரை ஆதிதிராவிடர் மற்றும் மலைவாழ் மக்களுக்கு 12 இடங்களும், பெண்கள் 6 பேர்களும் கோ-ஆப்ட் செய்து கொள்கிற முறை இருந்தது. இது ஒன்றும் நியமனம் அல்ல. மாநகராட்சியே பார்த்து கோ-ஆப்ட் செய்து கொள்வது. 1972 ஆம் ஆண்டுக்குப் பிறகு திருத்தப்பட்ட சட்டப்படி ஆதிதிராவிடர்

மற்றும் மலைவாழ் ஜாதியினர் 15 பேர்களும், பெண்கள் 8 பேர்களும் கோ-ஆப்ட் செய்து கொள்கிற முறை இருந்தது. இப்போது புதிய சட்டத் திருத்தப்படி ஆதிதிராவிடர் மற்றும் மலைவாழ் ஜாதியினருக்கு 20 வார்டுகள் தனியாகவே ஒதுக்கப் படுகிறது. பெண்களுக்கு 15 வார்டுகள் ஒதுக்கப்படு கின்றன. ஆதிதிராவிடர் மற்றும் மலை ஜாதியி னர் 5 பேரும் பெண்கள் 10 பேரும் மாநகராட்சியே பார்த்து கோ-ஆப்ட் செய்து கொள்ளலாம். அதைப் போலவே மதுரை மாநகராட்சியில் மொத்தம் 65 வார்டுகள் இருக்கின்றன. 1971 ஆம் ஆண்டு சட்டப்படி ஆதிதிராவிடர் மற்றும் மலை வாழ் ஜாதியினர் 3 பேரும் பெண்கள் 3 பேரும்தான் கோ-ஆப்ட் செய்து கொள்ள வசதியிருந்தது.

(பிற்பகல் 5-00)

1978 ஆம் ஆண்டு சட்டத் திருத்தப்படி ஆதிதிராவிடர் மற்றும் மலைவாழ் சாதியினர் 5 பேரும், பெண்கள் 5 பேரும் கோ-ஆப்ட் செய்துகொள்கின்ற முறை இருந்தது. இப்போது அதிலேயும் மாற்றம் செய்து புதிய திருத்தச் சட்டப்படி 8 வார்டுகள் தனியாக ஆதிதிராவிடர் மற்றும் மலை சாதி யினர் போட்டியிடும் வகையிலும் பெண்களுக்கு 6 வார்டுகளும் ஒதுக்கப்படுகிறது. கோ-ஆப்ட் செய்து கொள்வது 2 பேர் ஆதிதிராவிடர் மற்றும் மலை சாதியினருக்கும் அதைப்போல பெண்கள் 4 பேர் என்று இப்போது செய்து இருக்கின்றோம்.

கோவை மாநகராட்சியைப் பொறுத்தவரை 60 வார்டுகள் இருக்கின்றன. இந்த 60 வார்டுகளில் 1981 ஆம் ஆண்டு சட்டத் திருத்தப்படி ஆதிதிராவிடர் மற்றும் மலைவாழ் சாதி யினர் 5 பேரும், பெண்கள் 5 பேரும் கோ-ஆப்ட் செய்து கொள்ளும் முறை இருந்தது. இப்போது புதிய சட்டப்படி ஆதிதிராவிடர் மற்றும் மலைசாதியினர் 8 தொகுதிகளிலும், 6 தொகுதிகள் பெண்களுக்கு என்று ஒதுக்கப்பட்டு, அதிலே அவர்கள்தான் போட்டியிட முடியும். அதிலே கூட ஆதி திராவிடர் மற்றும் மலைசாதியினர் 2 பேர், பெண்கள் 4 பேர் கோ-ஆப்ட் செய்து கொள்கின்ற முறை கொண்டு வரப்பட்டு இருக்கிறது. ஆகவே இவற்றை எல்லாம் பார்த்தால் இது வரை மாநகராட்சியினுடைய வரலாற்றிலேயே இல்லாத அளவுக்குத் தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்று தனியாக— சென்னையைப் பொறுத்தவரை 20 இடங்கள் 5 ஆண்களும், 10 பெண்களும் கோ-ஆப்ட் செய்துகொள்கின்ற முறை வரலாற்றிலே இல்லாத அளவுக்கு இந்த ஆட்சி பொறுப்பேற்று நம்முடைய முதலமைச்சரவர்கள் அனுமதியோடு இங்கு இந்தச் சட்டத்தை நிறைவேற்றுகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி).

அதைப்போலத்தான் மதுரை, அதைப்போலத்தான் கோயம்புத்தூர். ஆகவே திராவிட முன்னேற்றக் கழக அரசைப் பொறுத்தவரைக்கும் நம்முடைய தமிழினத் தலைவர்

முதலமைச்சர் கலைஞர் அவர்களைப் பொறுத்தவரைக்கும் நாட்டு மக்களுக்குத் தந்த வாக்குறுதியை நிறைவேற்றக்கூடிய வகையில் தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், ஒடுக்கப்பட்ட மக்கள் நலனைக் கொண்டு அது உள்ளாட்சி அமைப்புத் தேர்தலாக இருந்தாலும் சரி அல்லது அரசாங்கத்தினுடைய சமுதாய நலத் திட்டப் பணிகளானாலும் சரி, அந்த அடிப்படையிலே தான் நாங்கள் அடி எடுத்து வைக்கிறோம் என்பதற்கு முதல் சாட்சியாக இந்தச் சட்டத் திருத்தம் நிறைவேற்றப்படவேண்டும் என்பதற்காகத்தான் இங்கு சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டு இருக்கிறது என்பதைக் கூறி முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி?

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சி சட்டங்கள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1989) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"பிரிவு 2, சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும்".

மாண்புமிகு திரு வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

"In Clause 2, *for* sub-clauses (1) and (2), *substitute* the following sub-classes namely:—

(1) In sub-section (1), for the words "Subject to the provisions of sub-section (4), the council shall consist of one hundred and fifty councillors elected" the words "The council shall consist of one hundred and fifty councillors elected and fifteen councillors co-opted" shall be substituted.

(2) for sub-sections (2) to (4), the following sub-sections shall be substituted, namely:—

(2) Among the elected members of the Council, twenty members shall be members of the Scheduled Castes and Scheduled Tribes and fifteen members shall be women and the State Government may, by notification, from time to time, specify in accordance with such rules as may be prescribed, the divisions in respect of which such members of the Scheduled Castes and Scheduled Tribes and women are to be elected.

(3) The elected members of the council shall, at the first meeting of the council after each ordinary election to the council, co-opt to itself as councillors, in accordance with such procedure as may be prescribed:—

(i) five persons belonging to Scheduled Castes and Scheduled Tribes; and

(ii) ten persons who are women:

Provided that no person shall be co-opted under this sub-section unless such person is eligible for being elected as a councillor from any one of the divisions.

Provided further that the councillors so co-opted shall have all the rights, powers and privileges of an elected councillor''.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

''பிரிவு 2, சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, பிரிவு 2 நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 2, திருத்தப்பெற்றபடி பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 3.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: ''பிரிவு 3 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும்''.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.

"**For Clause 3, substitute** the following, namely:—

"3. In section 5 of the Madurai City Municipal Corporation Act, 1971, for sub-sections (2) and (3), the following sub-sections shall be substituted, namely:—

"(2) The Council shall consist of such number of members as may be determined under sub-section (1) and elected in the manner laid down in this Act and six councillors co-opted in the manner laid down in sub-section (4).

(3) Among the elected members of the council, eight members shall be members of the Scheduled Castes and Scheduled Tribes and six members shall be women and the Government may, by notification, from time to time, specify in accordance with such rules as may be prescribed, the wards in respect of which such members of the Scheduled Castes and Scheduled Tribes and women are to be elected.

(4) The elected members of the council shall, at the first meeting of the Council after each ordinary election to the Council, co-opt to itself as Councillors, in accordance with such procedure as may be prescribed,—

(i) two persons belonging to the Scheduled Castes and Scheduled Tribes; and

(ii) four persons who are women;

Provided that no person shall be co-opted under this sub-section unless such person is eligible for being elected as a Councillor from any one of the wards:

Provided further that the Councillors so co-opted shall have all the rights, powers and privileges of an elected Councillor".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

பிரிவு 3, சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, பிரிவு 3 நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 3, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 4.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி;

"பிரிவு 4, சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும்".

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்;

"**For clause 4, substitute** the following, namely:—

4. In section 5 of the Coimbatore City Municipal Corporation Act, 1981. for sub-sections (2) and (3) the following sub-sections shall be substituted namely:—

"(2) The Council shall consist of such number of members as may be determined under sub-section (1) and elected in the manner laid down in this Act and six councillors co-opted in the manner laid down in sub-section (4).

(3) Among the elected members of the council, eight members shall be members of the Scheduled Castes and Scheduled Tribes and six members shall be women and the Government may, by notification, from time to time, specify in accordance with such rules as may be prescribed, the divisions in respect of which such members of the Scheduled Castes and Scheduled Tribes and women are to be elected.

(4) The elected members of the Council shall, at the first meeting of the council after each ordinary election to the Council, co-opt to itself as Councillorss in accordance with such procedure as may be prescribed:—

(i) two persons belonging to the Scheduled Castes and Scheduled Tribes; and

(ii) four persons who are women;

Provided that no person shall be co-opted under this sub-section unless such person is eligible for being elected as a Councillor from any one of the divisions:

Provided further that the councillors so co-opted shall have all the rights, powers and privileges of an elected Councillor.''

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி

''பிரிவு 4, சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, பிரிவு 4 நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 4, திருத்தப்பெற்றபடி பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

'' 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சி சட்டங்கள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1989) திருத்தப்பெற்றபடி, நிறைவேற்றப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு, திருத்தப்பெற்றபடி, நிறைவேற்றப்பெற்றது.

(ஏ) மதுவிலக்கு (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1989

மாண்புமிகு திரு. எஸ், ஜே சாதிக்பாட்சா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/1989) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும்.''

* 4—5—1989 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.